வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 28.02.2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

- கர்ப்பப்பை வாய் புற்றுநோய்க்கான தேசிய தடுப்பூசி இயக்கத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, அஜ்மீரில், நடைபெற்ற நிகழ்ச்சியில், இன்று தொடக்கி வைத்தார்.
- டெல்லி பல்கலைக் கழகத்தின், 122ஆவது பட்டமளிப்பு விழாவில் குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று உரையாற்றினார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை புதுச்சேரியில், 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களை துவக்கி வைக்கிறார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை காலை புதுச்சேரிக்கு வருவதையொட்டி, புதுச்சேரியில், போக்குவரத்து மற்றும் வாகன நிறுத்தம் குறித்த அறிவிப்பு வெளியிடப் பட்டுள்ளது.

***குடியரசு துணைத் தலைவர் (12)***

தொழில்நுட்ப தலைமைத்துவம், ஒருங்கிணைந்த வளர்ச்சி, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, சமூக நல்லிணக்கம் உள்ளிட்டவற்றை வளர்ச்சியடைந்த இந்தியா உறுதி செய்வதாக, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். டெல்லி பல்கலைக் கழகத்தின், 122ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், ஆராய்ச்சி மற்றும் தொழில்முனைவோருக்கு பல்கலைக் கழகங்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார். நாட்டில், உயர்கல்வி பயிலும் மகளிரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை சுட்டிக் காட்டிய

அவர், 70 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட மகளிர், தங்கப் பதக்கம் பெற்றுள்ளது குறித்து, மகிழ்ச்சி தெரிவித்தார். மாணவர்கள் தங்கள் கடமைகளை உணர்ந்து, நாட்டின் வளர்ச்சிக்கு பொறுப்புடன் பணியாற்றுவதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

***அஜ்மீர் (14)***

கர்பப்பை வாய் புற்றுநோய்க்கான தேசிய தடுப்பூசி இயக்கத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, ராஜஸ்தான் மாநிலம், அஜ்மீரில், நடைபெற்ற நிகழ்ச்சியில், இன்று தொடக்கி வைத்தார். நாடு முழுவதும் பெண்களின் நல்வாழ்வை, மேம்படுத்தும் நோக்கில், தொடங்கப்பட்டுள்ள இந்த திட்டத்தின் அடையாளமாக 14 வயதுடைய சிறுமிகளுக்கு HPV தடுப்பூசி செலுத்தப்படுவதை பார்வையிட்ட பிரதமர், அவர்களுடன் கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஒவ்வொரு ஆண்டும் 14 வயதுடைய, ஒரு கோடியே 15 லட்சம் சிறுமிகள் பயனடைய உள்ளனர். தொடர்ந்து, அஜ்மீரில், 16 ஆயிரத்து 680 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு திட்டப் பணிகளுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

இதனைத் தொடர்ந்து, குஜராத் செல்லும் பிரதமர், சனந்தில், 22 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான நாட்டின் முதலாவது செமி கண்டக்டர் உற்பத்தி மற்றும் விநியோக மைய செயல்பாடுகளை தொடக்கி வைக்கிறார்.

***மருத்துவர் சங்க கடிதம் (9)***

மத்திய அரசின் HPV தடுப்பூசித் திட்டத்திற்கு, மருத்துவர் சங்கம் வரவேற்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக, அச்சங்கம், பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில், பெண் குழந்தைகளின் சுகாதாரத்தை பாதுகாப்பதில், இந்தத் திட்டம் முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த தடுப்பூசி இயக்கத்தின் வெற்றிக்கு மருத்துவர் சங்கம் உறுதியுடன் துணை நிற்கும் என்றும், அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. 9 முதல் 14 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள், இந்த தடுப்பூசியை போட்டுக் கொள்வதன் மூலம் கர்பப்பை வாய் புற்று நோயை தடுக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

***பிரதமர் மதுரை (15)***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மதுரையில் 4 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப் பணிகளுக்கு நாளை அடிக்கல் நாட்டுகிறார். திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் தரிசனம் மேற்கொள்ளும் அவர், மதுரையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார். மதுரை, ராமேஸ்வரம், தனுஷ்கோடி இடையேயான முக்கிய ஆன்மிக நகரங்களை இணைக்கும் சாலைத் திட்டங்கள், பரமக்குடி, ராமநாதபுரம் நான்கு வழிப் பாதை, பிரதமரின் கடி சக்தி திட்டத்தின் கீழ், ரயில், சாலை, விமானம் மற்றும் துறைமுக போக்குவரத்தை மேம்படுத்தும் திட்டங்கள் உள்ளிட்டவை இதில் அடங்கும். இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக அம்ரித் பாரத் ரயில் நிலைய திட்டத்தின் கீழ், ஸ்ரீவில்லிப்புத்தூர், மனப்பாறை, சோழவந்தான், திருவாரூர் ரயில் நிலையம் உள்ளிட்ட மேம்படுத்தப்பட்ட 8 ரயில் நிலையங்களையும் பிரதமர் காணொளி வாயிலாக திறந்து வைக்கிறார். பொது ஒலிபரப்புச் சேவைகளை வலுப்படுத்தும் வகையில், கும்பகோணம், ஏற்காடு, வேலூர், ஆகாஷ்வாணி பண்பலை சேவைகளையும் பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

***புதுச்சேரி - HPV (12)***

இந்திய அரசால் நோய்த் தடுப்புத் திட்டத்தின் மூலம் 14 வயதுக்கு மேற்பட்ட பெண் குழந்தைகளுக்கு, நாடு தழுவிய HPV தடுப்பூசி திட்டத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று ராஜஸ்தான், அஜ்மீரில் தொடக்கி வைத்தார். இதன் தொடர்ச்சியாக, புதுச்சேரியில் துணைநிலை ஆளுநர் திரு. கைலாசநாதன் சுகாதாரத்துறை அலுவலகத்தில் பள்ளி மாணவிகளுக்கு தடுப்பூசி போடும் திட்டத்தை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன் மற்றும் சுகாதாரத் துறைச் செயலாளர் திரு. சௌத்திரி முகமது யாசின், சுகாதாரத்துறை இயக்குனர் டாக்டர் செவ்வேள், தேசிய சுகாதார திட்ட இயக்குநர் டாக்டர் கோவிந்தராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

***தேசிய அறிவியல் தினம் (11)***

தேசிய அறிவியல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. ராமன் விளைவை கண்டுபிடித்த நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி சர்.சி.வி. ராமனின் நினைவைப் போற்றும் வகையில், ஆண்டுதோறும் இந்நாள் கொண்டாடப்படுகிறது. இந்நாளையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், தேச வளர்ச்சி மற்றும் உலகளாவிய நன்மைக்காக இளைஞர்களுக்கு அதிகாரமளித்து, ஆராய்ச்சி சுற்றுச்சூழல் அமைப்புகளை வலுப்படுத்த உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மத்திய ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள சமூக ஊடகப் பதிவில், சர்.சி.வி. ராமனின் மரபு மற்றும் அவரது ராமன் விளைவு கண்டுபிடிப்பின் உந்து சக்தி மூலம், புதிய இந்தியாவை தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்துடன் உருவாக்குவோம் என்று கூறியுள்ளார்.

*__பிரதமர் புதுச்சேரி (12)__*

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை காலை 11:30 மணிக்கு புதுச்சேரி விமான நிலையம் அருகிலுள்ள ஹெலிபேட் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் புதுச்சேரிக்கான 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களை துவக்கி வைக்கிறார்.

சேதராப்பட்டில் 750 ஏக்கரில் அமையவுள்ள மருத்துவ பூங்கா, ஜவுளி பூங்கா, ஐடி பூங்கா ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டுகிறார். புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் புதிய இணைப்பு கட்டிடங்கள், ஜிப்மர் புற்றுநோய் மையத்தின் கட்டிடம், சர்வதேச நீச்சல் குளம் ஆகியவற்றையும் திறந்து வைக்கிறார்.

பிரதமரின் வருகையையொட்டி விமான நிலையம், ஹெலிபேட் மைதானம் மற்றும் லாஸ்பேட்டை பகுதி முழுவதும் 3 ஆயிரம் காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். மேலும் பிரதமரின் வருகையையொட்டி புதுச்சேரியில் டிரோன் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

*__புதுச்சேரி போக்குவரத்து (12)__*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை காலை புதுச்சேரிக்கு வருவதையொட்டி, புதுச்சேரி நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள முக்கிய சாலைகளில் வாகன நெரிசல் ஏற்படாமல் தடுக்க, போக்குவரத்து மற்றும் வாகன நிறுத்தம் குறித்த அறிவிப்பை முதுநிலை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வெளியிட்டுள்ளது. லாஸ்பேட்டை ஹெலிபேட் மைதானத்தில் நடைபெறும் விழாவில், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், அமைச்சர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்கின்றனர். விழா நடைபெறும் பகுதிகளில், தேவையற்ற வாகனங்கள் நுழைய தடை செய்யப்பட்டுள்ளதாகவும், ஹெலிபேட் மைதானம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சாலைகளில், காலை 6 மணி

முதல் மாலை 3 மணி வரை, வாகனங்களை இயக்கவும், நிறுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

*__காரைக்கால் வேளாண்துறை (13)__*

காரைக்கால் மாவட்டம், மாதூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் 19-வது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்று புதுச்சேரி வேளாண் துறைச் செயலர் திரு. சௌத்ரி முகமது யாசின், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக உயர்த்துவது, பயறு சாகுபடி பரப்பை அதிகரிக்கத் தரமான விதைகளை விநியோகிப்பது மற்றும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பது குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

குறிப்பாக, மகளிர் மற்றும் சுயஉதவிக் குழுவினருக்கு மதிப்புக் கூட்டுப் பயிற்சிகளை வழங்கி, அவர்களைத் தொழில் முனைவோராக மாற்றவும், மீன்வளம் மற்றும் கால்நடை வளர்ப்புத் தொழில் நுட்பங்களை விவசாயிகளிடம் அதிக அளவில் கொண்டு சேர்க்கவும் வலியுறுத்தப்பட்டது.

நிலைய முதல்வர் முனைவர் இராமநாதன் கடந்த கால நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்தார். தொடர்ந்து, வேளாண் மற்றும் கால்நடைத் துறை வல்லுநர்கள் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர்.

*__சனிப்பெயர்ச்சி (16)__*

காரைக்காலை அடுத்த திருநள்ளாறு ஸ்ரீ சனீஸ்வர பகவான் கோவிலில் வரும் மார்ச் 6-ஆம் தேதி நடைபெற உள்ள சனிப்பெயர்ச்சி விழாவை முன்னிட்டு, பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பில் இன்று விரிவான பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

புதுச்சேரி அரசு மற்றும் தருமை ஆதீனம் இணைந்து நடத்தும் நான்கு நாள் ஜோதிட மாநாடும் இவ்விழாவின் ஒரு பகுதியாக அமையவுள்ள நிலையில்,

லட்சக்கணக்கான பக்தர்கள் திரள்வார்கள் என்பதால் மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி தலைமையில் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஒத்திகையின் போது, கோவிலில் வரிசையில் நிற்கும் பக்தர் மயக்கமடைந்தால் அவரை ஸ்ட்ரெச்சர் மூலம் மீட்டு முதலுதவி அளிப்பது, தீபம் ஏற்றும் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டால் தீயணைப்புத் துறையினர் விரைந்து வந்து அணைப்பது மற்றும் புனித நளன் குளத்தில் யாரேனும் நீரில் மூழ்கினால் படகு மூலம் அவர்களை மீட்டு ஆம்புலன்ஸ் உதவியுடன் மருத்துவமனைக்கு அனுப்புவது போன்ற நிகழ்வுகள் தத்ரூபமாகச் செய்து காட்டப்பட்டன.

*__பாலஸ்தீனம் – இந்தியா (11)__*

பாலஸ்தீனத்தில் உள்ள அனைத்து இந்தியர்களும் பிராந்தியத்தின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு விழிப்புடன் இருக்குமாறு இந்தியா அறிவுறுத்தியுள்ளது. ரமல்லாவில் உள்ள பாலஸ்தீன மாநிலத்திற்கான இந்திய பிரதிநிதி அலுவலகம், ஒரு சமூக ஊடகப் பதிவில், உள்ளூர் பாதுகாப்பு மற்றும் அவசரகால நடைமுறைகளைப் பின்பற்றுமாறு இந்தியர்களை வலியுறுத்தியது. மேலும், அனைத்து இந்தியர்களும் எச்சரிக்கையாக இருக்கவும், தேவையற்ற நடமாட்டத்தைத் தவிர்க்கவும் கேட்டுக் கொண்டது.

அவசரநிலை ஏற்பட்டால், மக்கள் +9 7 0 5 9 2 9 1 6 4 1 8 என்ற மின்னஞ்சல் முகவரியிலோ அல்லது repoffice@mea.gov.in மற்றும் cons.ramallah@mea.gov.in என்ற மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொள்ளலாம் என்று அலுவலகம் தெரிவித்துள்ளது.

*__குவைத் – இந்தியா (13)__*

குவைத்தில் உள்ள இந்திய தூதரகம், குவைத்தில் உள்ள அனைத்து இந்தியர்களும் எச்சரிக்கையாக இருக்கவும், பிராந்தியத்தில் நிலவும் பாதுகாப்பு சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு எல்லா நேரங்களிலும் விழிப்புடன் இருக்கவும் அறிவுறுத்தியுள்ளது. இந்தியர்கள் பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகளைப் பின்பற்றுமாறு தூதரகம்

தனது ஆலோசனையில் வலியுறுத்தியுள்ளது. இந்தியர்கள் செய்திகள் மற்றும் குவைத் அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்புகளைக் கண்காணிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

ஏதேனும் அவசரநிலை ஏற்பட்டால், இந்தியர்கள் community.kuwait@mea.gov.in என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் இந்திய தூதரகத்தை தொடர்பு கொள்ளலாம் அல்லது + 9 6 5 6 5 0 1 9 4 6 என்ற எண்ணில் தூதரகத்தின் உதவி எண்ணை அழைக்கலாம். அந்த ஆலோசனையின்படி, தூதரகம் தொடர்ந்து வழக்கம் போல் செயல்படுகிறது.